[2000 மே 11

592—

பணி நிரந்தரம்

***19450—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய மாநில அரசு மத்திய அரசுடன் ஆலோசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறையின்கீழ் இருக்கிற சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் 10 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் நிரந்தரம் செய்யலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன்படியே, இந்திய உணவுக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றக்கூடிய சுமைதூக்கும் தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்து, அதனை நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற சுமைதூக்கும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டது உண்மை. காரணம், அவர்கள் நிறுவனத்திலே பணிபுரிகிறார்கள். தரம்

2000 மே 11]

பிரிக்கிறார்கள், அதிலே எடை போடுகிறார்கள். பிறகு லாரியிலே ஏற்றுகிறார்கள். அப்படி சொந்தமாகவே அங்கு இருக்கிறார்கள். ஆனால், சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைப் பொறுத்தவரை நுகர்பொருள் வாணிபக் கழகம், அதேபோல் பல்வேறு தனியார் நிறுவனங்கள், பாடநூல் நிறுவனங்கள், TASMAC போன்ற அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சரக்கோடு அந்த இடத்தை அவர்களுக்கு வாடகைக்கு விடுவது மட்டுமே எங்களுடைய பணி. அந்தச் சரக்கை ஏற்றி, இறக்க அந்த நிறுவனமே ஆள் வைத்திருக்கிற காரணத்தால், நேரடியாகச் சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே எந்த மூட்டை தூக்கும் தொழிலாளர்களும் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் நிரந்தரப்படுத்த வாய்ப்பே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *593*, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

593—

கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி

***26247—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு தஞ்சையிலிருந்து பிரித்து, திருச்சியில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஆய்வு செய்து, கரூரில் திறக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு